# முதல் இடைப் பருவத் தேர்வு - 2022

**11** - ஆம் வகுப்பு **வரலாறு** பதிவு எண். | | | | | | |

காலம் : 1.30 மணி மதிப்பெண்கள் : 50

## பகுதி - I

**I அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்.** 10 x 1 = 10

1. வரலாற்றின் பழமையான காலம் ......... ஆகும்.
அ) பழங் கற்காலம் ஆ) புதிய கற்காலம்
இ) செம்புக் காலம் ஈ) இரும்புக்காலம்

2. மெஹர்கார் ............. பண்பாட்டுடன் தொடர்புடையது
அ) பழைய கற்காலம் ஆ) புதிய கற்காலம்
இ) இடைக்கற்காலம் ஈ) செம்புக் காலம்

3. ஹரப்பா மக்களுக்கு முக்கியமான வாழ்வாதார வழிமுறையாக ............. இருந்தது
அ) வேளாண்மை ஆ) மட்பாண்டம்
இ) கைவினைத் தொழில்கள் ஈ) மீன் பிடித்தல்

4. வேதப்பாடல்களின் முக்கிய தொகுப்பின் பெயர்
அ) பிராமணங்கள் ஆ) சம்ஹிதைகள்
இ) ஆரண்யகங்கள் ஈ) உபநிடதங்கள்

5. **கீழ்க்காணும் இணைகளை கவனிக்கவும்**
அ) சேனானி - படைத்தளபதி
ஆ) கிராமணி - கிராமத் தலைவர்
இ) பலி - தன்னார்வத்தால் கொடுக்கப்பட்டது
ஈ) புரோகிதர் - ஆளுநர்

6. அஜாத சத்ருவுக்கும் புத்தருக்குமிடையேயான சந்திப்பைக் குறிப்பிடும் பௌத்த நூல் ........ ஆகும்.
அ) சீவக சிந்தாமணி ஆ) அச்சரங்க சூத்திரம்
இ) கல்வ சூத்திரம் ஈ) சமண பலசுத்தா

7. வட இந்தியாவில் 16 மகாஜனபதங்களில் வலிமை படைத்ததாக வளர்ந்த அரசு ............. ஆகும்.
அ) கோசலம் ஆ) அவந்தி
இ) மகதம் ஈ) குரு

8. அசோகரது தூண்களில் உள்ள பிராமி எழுத்துகளுக்கு பொருள் கண்டுபிடித்தவர்
அ) தாமஸ் சாண்டர்ஸ் ஆ) ஜேம்ஸ் பிரின்செப்
இ) சர் ஜான் மார்ஷல் ஈ) வில்லியம் ஜோன்ஸ்

9. மகதத்தின் முதல் அரசாக அறியப்படுபவர் ஹர்யங்கா வம்சத்தைச் சேர்ந்த ........... .
அ) பிம்பிசாரர் ஆ) அஜாதசத்ரு
இ) அசோகர் ஈ) மகபத்ம நந்தர்

10. மெகஸ்தனிஸ் எழுதிய ............ சந்திரகுப்தரின் அரசவையையும், அவரது நிர்வாகத்தையும் விவரிக்கிறது.
அ) இண்டிகா ஆ) முத்ராராட்சசம்
இ) அஷ்டத்யாயி ஈ) அர்த்த சாஸ்திரம்

## பகுதி – II

**குறிப்பு : ஏதேனும் ஐந்து வினாக்களுக்கு சுருக்கமாக விடையளிக்கவும்.** 5 X 2 = 10

11. ஹோமினின் குறித்து சிறுகுறிப்பு வரைக.
12. சிந்து நாகரித்தின் வீழ்ச்சிக்கான காரணங்களைக் கூறுக.
13. தொடக்க வேதகாலத்தில் பெண்களின் நிலையைக் கோடிட்டுக் காட்டுக.
14. இந்தியாவின் இரும்புக் காலம் குறித்து நீவிர் அறிந்ததென்ன?
15. மகாவீரருடைய போதனைகளின் மையக்கருத்து என்ன?
16. ஜனபதங்களுக்கும் மகாஜனபதங்களுக்கும் இடையேயான வேறுபாட்டைக் கூறுக.
17. மௌரிய அரசு பற்றி ஆய்வுக்கு உதவும் இலக்கியச் சான்றுகள் பற்றிச் சிறுகுறிப்பு தருக.

## பகுதி – III

**குறிப்பு : ஏதேனும் ஐந்து வினாக்களுக்கு விடையளிக்கவும்.** 5 X 3 = 15

18. அச்சூலியன் சோஹானியக் கருவித் தொழில்நுட்பம் குறித்து எழுதுக.
19. தென் இந்தியாவின் செம்புக் காலப் பண்பாடுகளைச் சுருக்கமாக விவரிக்கவும்.
20. மேய்ச்சல் சமூகத்தின் இயல்புகளை ஆய்க.
21. கங்கைச் சமவெளியில் நிகழ்ந்த நகரங்களின் தோற்றத்துக்கான காரணங்களை ஆராய்க.
22. தமிழ்நாட்டில் சமணம் செலுத்திய செல்வாக்கைக் குறிப்பிடுக.
23. தொல்லியல் கண்டுபிடிப்புகள் மூலம் தெரியவரும் நகரப் பண்புகளைக் கூறுக.
24. அசோகர் கலிங்கம் மீது படையெடுத்தது பற்றி நீவிர் அறிவது என்ன?

## பகுதி – IV

**குறித்து : அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்.** 3 X 5 = 15

25. அ) வரலாற்றுக்கு முந்தைய இந்தியா குறித்து விளக்குக.

***(அல்லது)***

ஆ) திட்டமிடப்பட்ட நகரங்களை ஹரப்பா, மொஹஞ்சதாரோ பற்றி எழுதுக.

26. அ) தமிழ்நாட்டின் பெருங்கற்கால அகழ்வாய்விடங்களைப் பற்றி விவாதிக்க.

***(அல்லது)***

ஆ) இந்திய வரைபடத்தில் பதினாறு மகாஜனபதங்களில் கீழ்க்கண்ட இடங்களைக் குறிக்கவும்.

1) கோசலம் 2) மகதம் 3) குரு 4) அவந்தி 5) காம்போஜம்

27. அ) புத்தரின் எண் வழிப்பாதையை விவரி.

***(அல்லது)***

ஆ) மௌரிய ஆட்சியமைப்பின் முக்கியக் கூறுகளை விவரிக்கவும்.



இந்தியா
N